உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 23.06.2026 • மலர் 04 • இதழ்: 174 • செவ்வாய்க்கிழமை • Edition : Nagercoil • 23.06.2026 • Vol : 04 • Issue : 174 • Page : 4 • Rs. 5/-

### நீட் தேர்வு மாணவர்களுக்காக

# விமான நிலையத்தில் காத்திருந்த பிரதமர் மோடி

புதுடெல்லி ஜூன்23

இளநிலை நீட் மறு தேர்வு எழுதச் செல்லும் மாணவர்களுக்கு போக்குவரத்து நெரிசல் உள்ளிட்ட எந்தவித சிரமமும் ஏற்படக்கூடாது என்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி டெல்லி விமான நிலையம் 45 நிமிடம் காத்திருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

நீட் மறுதேர்வு நேற்று நாடு முழுவதும் நடைபெற்றது. இந்தியாவில் 551 நகரங்களிலும், வெளிநாடுகளில் 14 நகரங்களிலும் என மொத்தம் 5 ஆயிரத்து 440 தேர்வு மையங்களில் சுமார் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தேர்வு எழுதினர். தமிழ்நாட்டை பொறுத்தவரையில் 31 மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த 307 தேர்வு மையங்களில் 1 லட்சத்து 42 ஆயிரத்து 489 மாணவ மாணவிகள் எழுத அனுமதிக்கப்பட்டனர். சென்னையில் மட்டும் 43 தேர்வு மையங்களில் 22 ஆயிரத்து 128 பேர் தேர்வு எழுதினார்கள். நீட் தேர்வு நேற்று பிற்பகல் 2 மணிக்கு தொடங்கி



மாலை 5.15 மணி வரை நடைபெற்றது.

இந்த நிலையில், நேற்று கொல்கத்தா சென்ற பிரதமர் மோடி பிற்பகல் 1.15 மணியளவில் டெல்லி விமான நிலையம் வந்துள்ளார். ஆனால், உடனடியாக தனது இல்லத்திற்குச் செல்லாமல், விமான நிலையத்திலேயே காத்திருந்தார்.நீட் மறுதேர்வு பிற்பகல் 2 மணிக்கு தொடங்க இருந்த நிலையில், தேர்வு மையங்களுக்கு சென்று கொண்டிருந்த மாணவர்களின் பயணத்திற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரதமரின் வாகன அணிவகுப்பு நகரும் போது பாதுகாப்பு காரணங்களுக்காக குறிப்பிட்ட சாலைகளில் போக்குவரத்து கட்டுப்பாடுகள் மற்றும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுவது வழக்கம். இதனால் மாணவர்கள் தேர்வு மையங்களை அடைவதில் சிரமம் ஏற்படக்கூடும் என்பதால், தேர்வு தொடங்கும் வரை பிரதமர் மோடி விமான நிலையத்திலேயே காத்திருந்ததாக கூறப்படுகிறது. பிற்பகல் 2 மணிக்கு நீட் மறுதேர்வு தொடங்கிய பின்னரே அவர் தனது இல்லத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.



## தூய்மை தஞ்சை இயக்கத்தினை கலெக்டர் ரேவதி துவக்கி வைத்தார்

தஞ்சாவூர் ஜூன் 23

தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் 'தஞ்சை தூய்மை' இயக்கத்தினை மாவட்ட கலெக்டர் ரேவதி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் ரேவதி தெரிவித்ததாவது

பாரம்பரிய நகரமாகும் கலாச்சார நகரமாகும் விளங்கும் தஞ்சாவூர் மாநகரப் பகுதியில் தூய்மையாகவும், அழகாகவும் ,பராமரிக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாவட்ட நிர்வாகம், தஞ்சாவூர் மாநகராட்சியும்இணைந்து தூய்மை தஞ்சை சுகாதார இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது இதன் அடிப்படையில் தஞ்சாவூர் மாநகராட்சி உட்பட்ட சாலைகள், ரவுண்டானாக்கள், பூங்காக்கள், உள்ளிட்ட பகுதிகள் அனைத்தும் தூய்மையாகவும், அழகாகவும், விளங்கும் வகையில் பொது இடங்களான சாலைகள், மற்றும் சென்டர் மீடியன் ஆகிய பகுதிகளில் பசுமைமை பாதுக்காக்கும் வகையில் புதிதாக மரக்கன்றுகள் வைத்தல்

ஏற்கனவேஉள்ளமரம்செடிகொடிகளைபுனரமைத்து அழகுபடுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. பாரம்பரிய நகரமாகவும் கலாச்சார நகரமாகும் விளங்கும் தஞ்சாவூர் மாநகரப் பகுதியில் தூய்மையாகவும் அழகாகவும் பராமரிக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாவட்ட நிர்வாகம் தஞ்சாவூர் மாநகராட்சி இணைந்து தூய்மை தஞ்சை சுகதார இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது இதன் மூலம் தஞ்சாவூருக்கு வருகை தரும் வெளிநாட்டினர் வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய மிக்க தஞ்சாவூர் பகுதியை காண வருகை தரும் போது பசுமை நிறைந்த தஞ்சையையும் அவர்களுக்கு காட்சிக்கு விருந்தளிக்கும் வகையில் சிறப்பாக அமைக்கப் படவுள்ளது. என மாவட்ட கலெக்டர் ரேவதி தெரிவித்தார்

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் தீபனா விஸ்வேஸ் வரி, வருவாய் கோட்டாட்சி யர் நித்யா, வட்டாட்சியர் சிவகுமார், மாநகர் நல அலுவலர் வீராசாமி, மாநகராட்சி பொறியாளர்கள் மோகன், மனோகர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்



மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் இயற்கை மரண உதவித்தொகையினை பயனாளிகளுக்கு வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் உள்ளார்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் கோரிக்கைமனுக்களைபெற்றுகுறைகளைகேட்டறிந்தார்.உடன்,தனித்துணைஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் .அபிநயா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் . முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## தேனி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தேனி, ஜூன் 23

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 438 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு, 3 பயனாளிகளுக்கு ரூ.1,58,900/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், வழங்கினார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 438 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதனைத்தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பிட்டுத் திட்டத்தின் கீழ் 3 மாற்றுத்திறனாளிப் பயனாளிகளுக்கு ரூ.1,58,900/மதிப்பிலான நவீன செயற்கை கால்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) கதிர்வேல், தனித்துணை ஆட்சியர் (ச. பா.தி.) கவிதா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தேனிமாவட்டஆட்சியர்அலுவலகத்தில்(22.06.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.




### நாகர்கோவிலில் முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாள் விழா:

## 10 மற்றும் 12ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கி கௌரவித்த தொழிலதிபர் பால்ராஜ்

நாகர்கோவில், ஜூன் 22

தமிழகவெற்றிகழகத்தின்தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான ஜோசப் விஜயின் 52வது பிறந்தநாள் இன்று தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவன் ஆலோசனையின்படி நாகர்கோவில் மாநகரம் 12வது வார்டு, பரதர் தெருவில் உள்ள அலங்கார மண்டபத்தில் வைத்து10 மற்றும் 12வது வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சுமார் 60 மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு விழா மற்றும் ஊக்கத்தொகை வழங்கும் விழாநடைபெற்றது.விழாஏற்பாடுகளை 12வது வார்டு நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர். விழாவிற்குஸ்ரீகிருஷ்ணாபவுண்டேஷன் நிறுவனரும் தவெக நிர்வாகியுமான P. பால்ராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கி கௌரவித்தார். அதனைத்தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. பின்னர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சுற்றுவட்டாரபகுதி மக்கள்200பேருக்கு மரக்கன்றுகள் வழங்கினார். இந்த விழாவில் வார்டு நிர்வாகிகள் அஜித், கைலாஷ், நிஷாந்த், அர்ஜுன், ரேவதி, வழக்கறிஞர்சுரேஷ்பாபுஉட்படமற்றும் தொண்டர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





### முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாள்!

## இளைஞர் அணி இணை அமைப்பாளர் வழக்கறிஞர் காமராஜ் கண்ணன் சார்பில் அரசு மருத்துவமனையில் ஆதரவற்ற நிலையில் சிகிச்சை பெற்று வரும் முதியோருக்கு நலதிட்ட உதவிகள்

நாகர்கோவில், ஜூன் 23

தமிழக வெற்றி கழக தலைவரான முதல்அமைச்சர் விஜய்யின் பிறந்தநாள் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் நேற்று கொண்டாடப்பட்டது. த.வெ.க. கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவன் தலைமையில் கட்சியின் நிர்வாகிகள் மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகளை வழங்கி உற்சாகமாகக் கொண்டாடினர். அந்த வகையில் தவெக குமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி இணை அமைப்பாளர் வழக்கறிஞர் காமராஜ் கண்ணன் தலைமையில் நாகர்கோவில் ஆசாரிபள்ளம்அரசுமருத்துவமனையில் ஆதரவற்ற நிலையில் சிகிச்சை பெற்று வரும் 12 முதியோர்க்கு ஹாண்ட் ஸ்டிக்குகள், பாம்பெர்ஸ், யூரின் சீட்கள், புத்தாடைகள், பிஸ்கட்கள், தேங்காய் எண்ணெய், சோப்புகள் மற்றும் பேஸ்ட்கள் போன்ற அன்றாடம் பயன்படும் மருத்துவ பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் நலத்திட்ட உதவிகளை குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவன் வழங்கினார். உடன் மாவட்ட இணைச் செயலாளர் பிரேம்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜன் உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில்

# தமிழக முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கும் விழா



தருமபுரி ஜூன் 23

தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் தமிழக முதலமைச்சர் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு தருமபுரி நகரம் தேர் நிலையம் அருகில் உள்ள நகராட்சி தொடக்கப் பள்ளியில் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விமல் ராஜ் தலைமையில் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டுகள், பேனாக்கள், பென்சில்கள் மற்றும் தண்ணீர் சுத்திகரிப்பு கருவி ஆகியவைகளை வழங்கினார்கள். இதில் இளைஞர் அணி இணை அமைப்பாளர் கோபி, இளைஞர் அணி பொருளாளர் முருகன், வினோத், ரமேஷ், திருப்பதி, மைல்ஸ், ரம்யா தேவி மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்



# நியாயவிலைக்கடைகளில் சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு கலெக்டர் பாராட்டு

நாகர்கோவில், ஜூன்.23

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் மக்கள்குறைதீர்க்கும்நாள்கூட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார்.

இந்த கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித் தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 582 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் சார்பில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட நியாயவிலைக்கடைகளில் சிறப்பாக பணிபுரிந்த சிறந்த விற்பனையாளர் மற்றும் எடையாளர்களுக்கு ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர்பிரதப்பணியாளர்களுக்குவழங்கி கௌரவித்தார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.பூங்கோதை, மாவட்ட வழங்கல் அலுவலர் புஷ்பா தேவி, தனித்துணை ஆட்சியர் சமூகபாதுகாப்பு திட்டம் சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பத்மபிரியா (நிலம்), துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



# தமிழக வெற்றி கழகம் சார்பில் முதல்வர் விஜய் பிறந்தநாள் விழா

திருப்பூர்: ஜூன் 23

தமிழக வெற்றி கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு திருப்பூர் புதிய பேருந்து நிலையத்தில் மாநகர் மாவட்ட கழகம் சார்பில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அறுசுவை அன்னதான உணவு வழங்கப்பட்டது விழாவிற்கு பொருளாளர் வெள்ளைச்சாமி தலைமையில் ராஜசேகர். பால குமார். முன்னிலையில்.கனிஷ்காசிவக்குமார். ஓம் சக்தி சில்க்ஸ் ரஞ்சித் குமார், அவர்களின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

இதில் சொர்க்கம் நீதி ராஜன். புதிய பேருந்து நிலையம் பகுதி கழகம் பிரகாஷ். பொதுக்குழு உறுப்பினர் பாலா. ராஜசேகர் திலீப். ரங்கசாமி. செல்வராஜ். மணிகண்டன். அருண் பாண்டி. சிதம்பரம் உள்ளிட்ட நிர்வாகிகள்சார்பு அணி நிர்வாகிகள்நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்....



# தருமபுரியில் தமிழக முதல்மைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு 60 அடி கம்பத்தில் கொடி ஏற்றும் விழா.

தருமபுரி ஜூன் 23

தருமபுரி நகரம் மதிக்கோண் பாளையத்தில் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் முதலமைச்சர் ஜோசப் விஜய் 52 வது பிறந்தநாளை முன்னிட்டு 60 அடி உயரமுள்ள கம்பத்தில் தமிழக வெற்றி கழகத்தின் கொடியை மேற்கு மாவட்ட செயலாளர் தாபா சிவன் ஏற்றி வைத்தார். இந்த ஏற்பாட்டை மாணவரணி இணை அமைப்பாளர் அசோக் குமார், பிரபாகரன், மாணவரணி அமைப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். மாவட்ட இணைஅமைப்பாளர் வீரமணி, மாவட்ட,நகர, ஒன்றிய கிளை நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.இதைத்தொடர்ந்துபொதுமக்களுக்கு புடவைகள் , அன்னதானம் வழங்கப்பட்டது.



தமிழக முதல்வர் ச. ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு கழகப் பொதுச் செயலாளர் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர், N ஆனந்த் MLA ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் . பி.முகந்தன் உத்தரவின்படி கிருஷ்ணகிரி மத்திய மாவட்டம் தென் மேற்குஒன்றியசெயலாளர்வி.சந்திரசேகர்அறிவுரத்தின்படி ஒன்றிய செயற்குழு உறுப்பினர் ஆனந்தன் தலைமையில் சோக்காடிபஞ்சாயத்துதுடுகனள்ளிஅரசுயர்நிலைப்பள்ளி பள்ளி மாணவ மாணவிகளுக்கு எழுது பொருள் உபகரணங்கள் மற்றும் வாட்டர் கேன்கள் உணவு வழங்கினர்

# சேலம் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



சேலம், ஜூன் 23

'சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும் அடிப்படை தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவும் பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்றும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் மீண்டும் வராத வகையில் மனுக்களின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. அந்த அடிப்படையில் இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டு மனை பட்டா, பட்டா மாறுதல்,

ஜாதி சாதிச் சான்று, வேலைவாய்ப்பு, வங்கி கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதி உதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட பொதுமக்களின் வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 630 மனுக்கள் பெறப்பட்டன. மாற்றுத்திறனாளிகளுக்கு சிரமம் இல்லாமல் மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக தரைதளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான முகாம் நடைபெற்றது. அதில் 23 மனுக்களை மாற்றுத்திறனாளிகள் அளித்துள்ளனர்.

இதனை தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு ஊன்றுகோல்கள் இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு உதவியாக அக்கு கட்டைகள், ஒரு மாற்றுத்திறனாளிக்கு நிற்க உதவும் உபகரணம் என ஐந்து மாற்றத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் வழங்கினார்

## தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பில்

# "மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில்" பணியாற்றிய ஊழியர்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று மருத்துவ பணி



சேலம், ஜூன் 23

தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வு துறையின் "மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தில்" பணியாற்றிய ஊழியர்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று மருத்துவ பணியில் கடந்த 5 ஆண்டுகளாக மாத ஊதியம் ரூபாய் 5500/=ஐ ஊக்கத்தொகையாக பெற்று பணியாற்றி வருகின்றனர். இவர்களை நடைமுறையில் அனைத்து பணிகளிலும் பயன்படுத்தப்படுகின்றனர். 2 மணி நேரம் பணி என்றுகூறி பணி அமர்த்திவிட்டு 8 மணி நேரத்துக்கு மேல் பணிச் சுமையை கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் கடந்த அரசு பொறுப்பில் இருந்தபோது 7.3.2026 ல் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் செய்தி வெளியீடு எண் 618 படி 2026 மே 1 முதல் nhm 42000 ஒப்பந்த ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி ஊழியர்களும் ஊதியம் வழங்க கேட்டு மார்ச் 2026 ல் சங்கத்தின் சார்பில் காத்திருப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 16.3.2026 அன்று அப்போதைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், முதன்மை செயலாளர் மற்றும் இயக்குனர்ஆகியோரிடம்பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஊழியர்களின் ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று உறுதிப்பட தெரிவித்தனர். தற்போது புதிய அரசு அமைந்துள்ளது இந்த அரசு இதுவரையிலும் 13 ஆயிரத்து 225 டபிள்யு எச்வி ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கவில்லை. இதனால் ஏழை, எளிய இளம் பெண் ஊழியர்கள் கடும் விலைவாசி உயர்வினாலும், பெட்ரோல் டீசல் விலை உயர்வு, சமையல் எரிவாயு விலை உயர்வு, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விலை உயர்வு மற்றும் கல்வி மருத்துவ செலவுகளை ஈடுகட்ட முடியாமல் மிகுந்த சிரமமான வாழ்க்கை போராட்டத்தை நடத்தி வருகின்றனர். பெண்கள் நல அரசாக தங்களை அடையாளப்படுத்தும் தமிழக அரசு உடனடியாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 15,000 ஊதியம் வழங்க வேண்டும் என்றும் பணி உத்திரவாதத்தை ஏற்படுத்த கோரியும், கடந்த 4 மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை என்பது குறித்தும் சங்கத்தின் சார்பில் மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களிடம் மனு கொடுக்கப்பட்டது. அதன் பெயரில் கடந்த 2.6.2026 அன்று அரசாணை 340 ன் படி ஊதியம் வழங்க மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு ரூபாய் 5 கோடி காசோலை அனுப்பப்பட்டது.

ஆனால் 10 தினங்களுக்கு மேலாகியும் இன்னும் ஊதியம் வழங்கப்படவில்லை. இதனால் ஊழியர்கள் குடும்ப செலவுகளுக்கு பணம் இல்லாமல் திண்டாடி வருகிறார்கள். மேலும் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அதிகாரிகள் மீது உரிய விசாரணை நடத்தி காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் டி பி ஹெச் நிர்வாகத்தின் நடைமுறைக்கு மாறாக ஊழியர்கள் மீது வேலை பளு அதிகரிப்பதை உடனே நிறுத்த வேண்டும் மற்றும் எழுத்துப்பூர்வமான உத்தரவை அனைத்து மாவட்ட டி.ஹெச்ஓ விற்கும் அனுப்பி அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை விரைந்து அமல்படுத்த கோரி 22.6.2026 அன்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சங்கத்தின் சார்பில் மனு கொடுத்தனர்.

## தக்கலையில்

# போக்சோ வழக்கில் சாட்சியமளித்த நர்சிங் மாணவியை தாக்கிய தந்தை கைது

நாகர்கோவில், ஜூன். 23

தக்கலை அருகே உள்ள 22 வயதான இளம்பெண் ஒருவர் தற்போது நாகர்கோவிலில்உள்ளதனியார்கல்லூரியில்பிஎஸ்சி நர்சிங் இறுதி ஆண்டு படித்து வருகிறார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு மாணவியிடம் அவரது தந்தை பாலியல் ரீதியான சீண்டலில் ஈடுபட்டார் என்ற புகார் எழுந்தது. இது தொடர்பான புகாரின் பேரில் மாணவியின்தந்தை மீது போக்சோவழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த சம்பவத்துக்கு பின் அவரது தந்தை பிரிந்து சென்று விட்டார். இந்த வழக்கு நாகர்கோவில் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இந்த நிலையில் இந்த வழக்கில் சமீபத்தில் மாணவி சாட்சியம் அளித்துள்ளார். இதனால் மானையின் மீது அவரது தந்தை ஆத்திரமடைந்தார்.

சம்பவ தினம் இரவு சுமார் 11 மணியளவில் மாணவி வீட்டுக்கு வந்த. தந்தை மாணவியிடம் தகராறு செய்தார். எனக்கு எதிராக நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கூறி தாக்கி, கொலை மிரட்டல் விடுத்துள்ளார். சத்தம் கேட்டு வீட்டில் இருந்தவர்கள் ஓடி வந்தனர். இதை அடுத்து அவர்கள்தந்தைதப்பிஓடிவிட்டார்.காயமடைந்த மாணவி தக்கலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்த புகாரின்பேரில்தக்கலை போலீசார் வழக்கு பதிவு செய்து மாணவியின் தந்தையை கைது செய்துள்ளனர்.

## ஈத்தாமொழி தென்னந்தோப்பில் 51 பேர் மது, கிடா விருந்து

# ட்ரோன் உதவியுடன் சுற்றி வளைத்த போலீசார்; ரவுடி கைது



நாகர்கோவில், ஜூன். 23

நாகர்கோவில் அருகே உள்ள ஈத்தாமொழி பகுதியில்உள்ளஒருதனியார்தென்னந்தோப்பில் ரவுடி கும்பல் மது பார்ட்டியுடன் கிடா விருந்து கொண்டாட்டத்தில் இருப்பதாக குமரி மாவட்ட எஸ்பி ஸ்டாலினுக்கு தகவல் கிடைத்தது.

இதை அடுத்து தனிப்படை போலீசார் அந்த பகுதிக்கு விரைந்தனர். தென்னந்தோப்பில் இருந்தவர்கள் போலீசாரை பார்த்ததும் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். ட்ரோன் உதவியுடன் அவர்களை போலீசார் சுற்றி வளைத்தனர். இதில் 51 பேர் சிக்கினர்.

குமரி மாவட்டம் மட்டுமின்றி வெளியூர்களில் இருந்தும் இந்த விருந்துக்கு வந்து இருந்தனர். நண்பர் ஒருவருக்கு குழந்தை பிறந்துள்ளதால் அந்த மகிழ்ச்சியை கொண்டாட வந்ததாக கூறினார்கள். பிடிபட்ட 51 பேரில் 23 பேர் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் பட்டியலில் உள்ளவர்கள் ஆவார்கள். , இதில் நாகர்கோவில் அருகே உள்ள நங்கூரன் பிலாவிளையை சேர்ந்த லிங்கராஜா (46) என்பவரும் அடங்குவார்.

பிடிபட்டவர்களை காவல் நிலையத்தில் கொண்டு சென்று விசாரணை நடத்தினர். இதில் லிங்கராஜா மீது ஏற்கனவே பல்வேறு வழக்குகள் இருப்பதும், ஈத்தாமொழி காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளிகள் பட்டியலில் சி பிரிவில் இருப்பதும் தெரிய வந்தது. மேலும் சசி என்பவரை மிரட்டி பணம் பறித்ததாக புகார் இருந்தது. இந்த புகாரின் பேரில் லிங்கராஜாவை போலீசார் கைது செய்தனர். மற்றவர்களை எச்சரித்து அனுப்பி வைத்தனர்.

# லயன்ஸ் தலைமைப் பண்பு பயிற்சிப் பள்ளிக்கு நிதியுதவி




கோவை ஜூன்:23

பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 3242 சி மாவட்டத்தின் லயன்ஸ் தலைமைப் பண்பு பயிற்சிப் பள்ளியை ஆனை கட்டியில் சுமார் 5 ஏக்கர் நிலத்தில் 50 ஆயிரம் ஸ்கொயர் ஃபீட்டில் இடம் வாங்கி பில்டிங் கட்டுவதற்குமாவட்ட ஆளுநர் ராஜசேகர் முன்னாள் ஆளுநர் பழனிசாமி, ஆளுநர் தேர்வு செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் Faira அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் தேசிய செயலாளரும், லயன்ஸ் ஜி எம் டி ஒருங்கிணைப்பாளருமான லயன் செந்தில்குமார் பெண்கள் தினம் மாவட்ட தலைவர் சுப்பு செந்தில்குமார் நேரு நகர் லயன்ஸ் சங்கத்தின் தலைவர் இன்ஜினியர் தேஜஸ்வினி செந்தில்குமார் இணைந்து ரூபாய்.5 லட்சத்துக்கான காசோலையை வழங்கினார்கள்.

உடன் கவுன்சில் சேர்மன் செல்வம் முதலாம் துணை ஆளுநர் வழக்கறிஞர் சூரி நந்த கோபால் இரண்டாம் துணை ஆளுநர் பாஸ்கர் முன்னாள் ஆளுநர்கள் கருணாநிதி, ராம்குமார் மற்றும் அமைச்சரவை செயலாளர் ரவிசங்கர் விருது மாவட்ட தலைவர் அனீஸ்குமார் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# முத்துபுதூர் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் சி.ஜோசப் விஜய் 52 வது பிறந்தநாள் விழா



திருப்பூர்: ஜூன் 23

திருப்பூர்பழையபேருந்துநிலையம்எதிரில்முத்துப்புதூர் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் மாநகர் மாவட்ட செயலாளர் தெற்கு தொகுதி எம்எல்ஏ எஸ் பாலமுருகன் ஆலோசனைப்படி, மாநகர மாவட்ட துணைச் செயலாளர் எஸ் குத்புதீன், முன்னலையில், எம் முத்து சீனிவாசன், எம் ஜி எஸ் சையத்,சதீஷ்குமார், ராஜகோபால்,தலைமையில் பர்கத் பாஸ்கர் மோகன் பல் சமய நட்புறவு கழகத்தின் தலைவர் ஷாஜகான் மற்றும் கழகத்தின் நிர்வாகிகள். திருப்பூர் மாநகர தெற்கு தொகுதி த.வெ.க தொழில் சங்கம் சார்பில் மாணவ மாணவிகளுக்கு நோட்டு, பேனா, பென்சில், நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆசிரிய பெருமக்கள் மாணவ மாணவிகள் நலத்திட்ட உதவிகள் நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொண்டனர்..

# விழிப்புணர்வு ஓட்டம் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்துவது தொடர்பாக ஆலோசனை கூட்டம்



தேனி. ஜூன் 23

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (22.06.2026) போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், விழிப்புணர்வு ஓட்டம் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்துவது தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு துறை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலந்துரையாடி தெரிவித்ததாவது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் 26.06.2026 அன்று Start Run, Stop Drug – Anti Drug Run 2026' விழிப்புணர்வு ஓட்டம் நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது. இவ்விழிப்புணர்வு ஓட்டம் நிகழ்ச்சியில் மாணவர்கள், இளைஞர்கள், தன்னார்வ அமைப்புகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் கலந்து கொள்ள இருப்பதால், அவர்களுக்கு தேவையான பாதுகாப்புவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் காவல் துறை, நகராட்சித்துறை, சுகாதாரத்துறை, பள்ளிக்கல்வித் துறை உள்ளிட்ட சம்பந்தப்பட்டத் துறை அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் இரா.வைத்திநாதன், அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ரமேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) இராமகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் கதிர்வேல், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) கவிதா, மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவக்குமார் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழக முதல்வர் ச. ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு கழகப் பொதுச் செயலாளர் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர், N ஆனந்த் MLA ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் . பி.முகந்தன் உத்தரவின்படி கிருஷ்ணகிரி மத்திய மாவட்டம் தென் மேற்குஒன்றியசெயலாளர்வி.சந்திரசேகர்அறிவுரத்தின்படி ஒன்றிய செயற்குழு உறுப்பினர் .விக்னேஷ் தலைமையில் வெலகல்அள்ளி பஞ்சாயத்து அரசு தொடக்கப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு தண்ணீர் பாட்டில். பென்சில். தமிழக வெற்றிக் கழகத்தின் கிளை நிர்வாகிகள் வழங்கினார்கள்




# மேகதாதுவில் காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும்

## பா ம க பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம்

ஈரோடு ஜூன் 23

ஈரோடு மாநகர் மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக்குழு கூட்டம் ஈரோடு அசோகபுரம் தேவி மஹால் திருமண மண்டபத்தில் மாவட்ட செயலாளர் எஸ். ஆர். ராஜு தலைமையில் நடந்தது.

மாவட்ட தலைவர் பிரபு வரவேற்றார். இதில் மாநில ஒருங்கிணைப்பாளர் கார்த்தி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று அறிவித்த தமிழக முதல்வர் விஜய்க்கு நன்றி தெரிவிப்பது. கர்நாடக மாநில அரசு மேகதாது காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டத்தை செயல்படுத்தக் கூடாது அணை கட்டுவதை மத்திய மாநில அரசுகள் தடுத்து நிறுத்த வேண்டும் .ஈரோடு மாநகராட்சியில் சொத்து வரி தொழில்வரி உட்பட பல்வேறு வரிகளை உயர்த்தியதை மறு பரிசீலனை செய்ய வேண்டும்

மேகதாவில் அணைக்கட்ட முயற்சிக்கிற கர்நாடக அரசை கண்டித்து டாக்டர் அன்புமணி ராமதாசின் நடை பயணம் நடைபெறுகிறது. வருகிற ஜூலை இரண்டாம் தேதி ஈரோட்டில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு பேசுகிறார் இந்த கூட்டம் சிறப்பாக நடக்க விவசாயிகளை ஒருங்கிணைப்பது என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக ஈரோடு மாநகர மாவட்ட செயலாளர் எஸ் ஆர் ராஜூ பிறந்த நாள் பட்டாசு வெடித்து கொண்டாடப்பட்டது. அவருக்கு நிர்வாகிகள் வாழ்த்து தெரிவித்தனர்.



## தருமபுரி மேற்கு மாவட்ட தெற்கு ஒன்றியம் சார்பில்

# தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாளையொட்டி தருமபுரி காதுகேளார் பள்ளியில் மதிய உணவு வழங்கப்பட்டது

தருமபுரி ஜூன் 23

தருமபுரி மேற்கு மாவட்டம் தமிழக வெற்றி கழகம் தருமபுரி தெற்கு ஒன்றியம்சார்பில்தமிழகமுதலமைச்சர் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் 52 வது பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி இலக்கிய ம்பட்டி காதுகளார் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு இனிப்புகள் மற்றும் மதிய உணவு 200 நபர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தருமபுரி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் செந்தில்நாதன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விமல் ராஜ், அஜித் குமார், கழக இணை செயலாளர் நாகராஜ், கழகப் பொருளாளர் கார்த்தி, கழக ஒன்றிய நிர்வாகி விஜயன், கழக செயற்குழு உறுப்பினர் அருள்குமார், சிவா, பிரகாஷ், கோவிந்தன், அஸ்கர் பாஷா, கார்த்திகேயன், கழகத் துணைச் செயலாளர் கீர்த்திகா மற்றும் தமிழக வெற்றி கழக தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# இண்டியா யமாஹா மோட்டார் வாடிக்கையாளர்களுக்கு ஹைபிரிட் சேலன்ஞ் நிகழ்ச்சி



சென்னை, ஜூன் 23,

இண்டியா யமாஹா மோட்டார் நிறுவனம் சார்பாக ஹைபிரிட் சேலன்ஜ் நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது.

ஸ்மாட் மோட்டார் ஜெனரேட்டர் அமைப்பைக் கொண்ட யமஹாவின் ஹைபிரிட் தொழில்நுட்பம் மூலம் சாத்தியமாகும் ஈர்க்கக்கூடிய எரிபொருள் திறனை வெளிப்படுத்துவதையும், அதன் உண்மையான உலக நன்மைகளைப் பற்றி வாடிக்கையாளர்களுக்குக் கற்பிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

அங்கீகரிக்கப்பட்ட டீலர்ஷிப்களின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் உற்சாகமான பங்கேற்றனர்.

யமாஹா மோட்டார் சைகிள்களின் வேகத்திறன் மற்றும் எரிபொருள் சேமிப்பை பற்றி அறிந்து கொள்ள நடைபெற்ற வாடிக்கையாளர்களுக்கு "ரைடிங் சேலன்ஜ் " நிகழ்ச்சியில் மோட்டார் சைக்கிள்களுக்கு 50 கிலோ மீட்டர் மற்றும் ஸ்கூட்டர்களுக்கு 30 கிலோமீட்டர் தூரத்தைக் கொண்ட ஒரு திட்டமிடப்பட்ட போட்டி நடைபெற்றது.

போட்டியில் பங்கேற்ற வாகனங்களுக்கு ஒரே அளவான எரிபொருளை நிரப்பட்டு, ரைடின் முடிவில் மீதமுள்ள எரிபொருளை கணக்கிட்டு , வரைறுக்கப்பட்ட புள்ளிகள் பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் முதல் மூன்று இடங்களை பிடித்தவர்களுக்கு சான்றிதழ்களுடன் நினைவு பரிசு, பரிசுத்தொகை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சி யமாஹா வாகனங்களின் மீது மேலும் எரிபொருள் சேமிப்பு நம்பிக்கையை உறுதிசெய்தது. இந்நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் குடும்த்துடன் பங்கு பெற்றனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பொறுப்பேற்றுக் கொண்ட அனிதாவை தின தமிழ் நாளிதழ் மாவட்ட செய்தியாளர் ஆர் முருகேசன் மரியாதை நிமித்தமாக சந்தித்து பணி சிறக்க வாழ்த்துகளைத் தெரிவித்தார்

# ஆம்பூர் அடுத்த ஈச்சம்பட்டில் இரத்த தானம் மற்றும் மருத்துவ முகாம்

## மாவட்ட செயலாளர்,ஒன்றிய செயலாளர் ஆகியோர் துவக்கி வைத்தனர்.



ஆம்பூர், ஜூன். 23

திருப்பத்தூர் மாவட்டம தமிழக வெற்றிக் கழக விவசாய அணி சார்பாக சின்னபள்ளிகுப்பம் ஊராட்சி ஈச்சம் பட்டு கிராமத்தில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

மாதனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜெ. பாண்டியன் தலைமை வகித்தார். மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஜி. ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் வி. நவீன்குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ரத்த தானம் மற்றும் மருத்துவ பரிசோதனை முகாமை தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சுமார் 27 பேர் ரத்த தானம் செய்தனர்.

சுமார் 200க்கும் மேற்பட்டவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்து மாத்திரைகள் வழங்கப்பட்டது. சுமார் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. சுமார் 100க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகம், எழுது பொருட்கள், இனிப்பு வ ழ ங் க ப் ப ட் ட து . மாவட்ட இணைச் செயலாளர் சி. சரவணன், மாவட்ட துணை செயலாளர் ஆர்த்தி, ஒன்றிய இணைச் செயலாளர் சுமன் ராஜ், துணைச் செயலாளர் பிரகாஷ், செயற்குழு உறுப்பினர்கள் சங்கர், மேகலா,காவியா, சுமியா, நவீனராசு, ராகுல், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ராகுல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சந்தோஷ், விவசாய அணி மாவட்ட நிர்வாகிகள் குமரேசன், பார்த்திபன், காமேஷ், அசோக், வெங்கடேசன், மேல்குப்பம் கிளை செயலாளர்கள் செந்தில், ரவி, சுகுமார், செவிலியர் சுமதிரமேஷ், மகளிர் அணி நிர்வாகிகள் பிரியா, அருணா, மாவட்ட மாணவர் அணி இணை அமைப்பாளர் ராகுல், ஆம்பூர் நகர நிர்வாகிகள் சுரேந்தர், ஹேம்நாத், காங்கிரஸ் கட்சி மாதனூர் மேற்கு ஒன்றிய தலைவர் சுரேந்தர், மாவட்ட மாணவரணி நிர்வாகி ஜெகத் , ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சோசலிஸ்ட் ஜனதா கட்சியின் மத்திய அரசின் எரிவாயு சிலிண்டர் விலையேற்றத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்




சென்னை, ஜூன் 23

சோசலிஸ்ட் ஜனதா கட்சியின் சார்பாக மத்திய அரசின் எரிவாயு சிலிண்டர் விலைஏற்றத்தைதிரும்பப்பெறக்கோரி சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தஞ்சை இளஞ்சிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்பாட்டத்தில் லோகநாதன் வரவேற்புரை ஆற்றினார் . மற்றும் பாவலர் மு.ராமச்சந்திரன், டி. சிவஞானசம்ப ந்தன்.வழக்றிஞர்கள் எம்.எல். ரவி, கா.கி.மூர்த்தி, கரு.சந்திரசேகரன், வேலு சுபராசர், கவிஞர் குருத்தோ லை,மருதுபாண்டியர், இராஜேந்திரன், தேன் மொழி.எஸ். கலையரசி, ஆர்.தனசேகரன், பொன். ஆபேல், மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். மூத்ததுணைத்தலைவர் எம்.டி.ராமலிங்கம் நன்றி கூறினார்.

## ஆறுகாணி அருகே

# பிளஸ் 1 மாணவர் மீது தாக்கு 12 ஆம் வகுப்பு 7 மாணவர்கள் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஜூன். 23

ஆறுகாணி அருகே சிதறால் பகுதியில் தனியார் சிபிஎஸ்சி பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் அருமனை அருகே குஞ்சாலுவிளை பகுதியை சேர்ந்த சிறுவன் ஒருவன் பிளஸ் 1 படித்து வருகிறார். இந்த நிலையில் சம்பவ தினம் அந்த மாணவர் பள்ளி அருகே உள்ள கழிவறைக்கு சென்றுள்ளார்.

அப்போது அங்கு வந்த பிளஸ் 2 படிக்கும் மாணவர்கள் 7 பேர் கொண்ட கும்பல் திடீரென பிளஸ் 1 மாணவரின் சட்டையை பிடித்து இழுத்து தகாத வார்த்தைகளை பேசி தாக்கியதாக தெரிகிறது. இதில் காயமடைந்த பிளஸ் 1 மாணவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்து காயமடைந்த பிளஸ் 1 மாணவரின் தாய் ஆறுகாணி போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தர். புகாரின் பேரில் போலீசார் விசாரணை நடத்தியதில், பள்ளியில் வைத்து மாணவரை தாக்கியது உறுதியாக தெரிய வந்தது. போலீசார் அப்பள்ளியில் பிளஸ் 2 படிக்கும் 7 மாணவர்கள் மீது வழக்கு பதிவு செய்தனர்.

## சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவிலில்

# நடராஜப் பெருமானுக்கு ஆனிஉத்திர திருமஞ்சன அபிஷேகம்



சுசீந்திரம், ஜூன் 23

சுசீந்திரம் தாணுமாலயசுவாமி கோவிலில் உட்பிரகாரம் நடராஜர் மூர்த்தி சன்னதி உள்ளது இந்த நடராஜ மூர்த்திக்கு சித்திரை திருவோணம் ஆனி உத்திரம் ஆவணி சதுர்த்தி புரட்டாசி சதுர்த்தி மார்கழித் திருவாதிரை மாசி சதுர்த்தசி ஆகிய 6 நாட்களில் நடராஜமூர்த்திக்கு மகா அபிஷேகம் செய்யப்படுவது வழக்கம்.அதுபோலஇன்று ஆனி உத்திரத்தை முன்னிட்டு நேற்று அதிகாலை கோவில் நடை திறக்கப்பட்டு நடராஜ மூர்த்திக்கு பால் தயிர் பஞ்சாமிர்தம் இளநீர் சந்தனம் குங்குமம் திருநீறு எலுமிச்சை சாறு மாதுளைச் சாறு களபம் உட்பட்ட நறுமணப் பொருட்களால் திருமஞ்சன அபிஷேகம் நடைபெற்றது பின்பு அலங்கரிக்கப்பட்ட நடராஜ மூர்த்திக்கு அலங்கார தீபாராதனையும் நடைபெற்றது இதில் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர் பக்தர்களும் பெருமளவு கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்

## பசும்பொன் ஊராட்சியில்

# 300 மரக்கன்றுகள் நடும் விழா



கமுதி, ஜூன் 23

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பசும்பொன் ஊராட்சியில், தேவர் ஆலயம் செல்லும் வழித்தடத்தில் 300 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை வளத்தை மேம்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. எம். சிவகுரு பிரபாகரன் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்வில் தாசில்தார் முருகேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரசேகர், ஆணையாளர் மேகராஜ், தொழில்நுட்ப உதவியாளர் அய்யனார், பொய்யாமொழி ஊராட்சி செயலர் எம். சக்தி முருகன், உதவி பொறியாளர் அண்ணபூரணா தேவி, தோட்டக்கலை உதவி இயக்குநர் ராகேஷ், ஒன்றிய மேற்பார்வையாளர் பிரபாகரன், அலுவலக உதவியாளர்கள் பல்வேறு துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பசுமை வளத்தை அதிகரித்து, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்த மரக்கன்று நடும் திட்டம் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. மரக்கன்றுகள் முறையாக பராமரிக்கப்பட்டு வளர்க்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கோவையில்

# யமஹா நிறுவனத்தின் பிரம்மாண்ட 'டிராக் டே' நிகழ்ச்சி



கோவை ஜூன்:23

யமஹா மோட்டார் இந்தியா நிறுவனம்,கோவையில் உள்ள கோஸ்ட் உயர் செயல்திறன் மையத்தில் தனது வாடிக்கையாளர்களுக்காக டிராக் டே என்ற பிரத்யேக நிகழ்ச்சியை நடத்தியது.யமஹாவின் தி கால் ஆஃப் தி ப்ளூ பிராண்ட் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில்,200க்கும் மேற்பட்ட யமஹா வாகன ஓட்டிகள் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

கோவை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து சுமார் 500க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் இந்நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர்.இந்நிகழ்ச்சியில் R15, MT15 மற்றும் XSR155 ஆகிய வாகனங்களின் உரிமையாளர்கள் பங்கேற்றனர்.இவர்களுக்கு, மோட்டார் சைக்கிளைக் கட்டுப்படுத்துதல்,வளைவுகளில் வாகனத்தைச் சரியாக ஓட்டுதல் மற்றும் பாதுகாப்பான ஓட்டுதல் முறைகள் குறித்து நிபுணர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த 'டிராக் டே' பயிற்சியானது,ஓட்டிகளுக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டுதலின் நுணுக்கங்களை நேரடியாகக் கற்றுக்கொள்ளவும், தங்களின் ஓட்டுதல் திறனை மேம்படுத்தவும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. நாடு முழுவதும் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பல்வேறு பின்னணிகளைக் கொண்ட ஓட்டிகளை ஒன்றிணைக்கும் இந்த பயணம்,இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் நிலப்பரப்பைக் கொண்டாடும் ஒரு அடையாளப் பயணமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. யமஹாவின் நவீனரெட்ரோ ஸ்போர்ட் XSR155 மோட்டார் சைக்கிள், இந்த சாகசப் பயணத்தில் ஓட்டிகளுக்கு உறுதுணையாகப் பயணித்து வருகிறது.

இதுகுறித்துயமஹாநிறுவனம்கூறுகையில்,"இத்தகைய நிகழ்ச்சிகள் மூலம்,யமஹா தனது வலுவான பந்தய பாரம் zரியத்தைazநிலைநிறுத்துவதோடு,வாடிக்கையாளர்களிடையே ஒரு zழமான சமூக பிணைப்பை வளர்க்கிறது. மோட்டார் சைக்கிள் மீதான ஆர்வத்தால் ஒன்றுபட்ட ஓட்டிகளை இணைப்பதன் மூலம்,யமஹாவின் 'ப்ளூ ஸ்ட்ரீக்ஸ்' சமூகத்தை மேலும் வலுப்படுத்த விரும்புகிறோம்"என்று தெரிவித்துள்ளது.

## காவேரிப்பட்டினத்தில்

# முதல்வர் விஜயின் பிறந்த நாளை முன்னிட்டு இலவச இருதய மற்றும் பொது மருத்துவ முகாம்



காவேரிப்பட்டினம் ஜூன் 23:

தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் பிறந்தநாளை முன்னிட்டு கிருஷ்ணகிரியை அடுத்த காவேரிப்பட்டினத்தில் மாவட்ட மருத்துவர்அணி அமைப்பாளர் டாக்டர்ஜி பார்த்திபன் தலைமையில் இலவச இருதயம் மற்றும் பொது மருத்துவ முகாம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இம்முகாமில் சிறப்பு விருந்தினர்களாக மேற்கு மாவட்ட செயலாளர் வடிவேல், கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட செயலாளர் ஜி.சுரேஷ், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன், ஆகியோர் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி மருத்துவ முகாமினை துவக்கி வைத்தனர்.ஓசூர் சந்திரசேகர மருத்துவமனை டாக்டர் சந்திரமௌலி மற்றும் டாக்டர் பார்த்திபன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில் இதய ஆரோக்கியத்தை உறுதி செய்யும் வகையில் இசிஜி மற்றும் எக்கோ பரிசோதனைகள் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டன ஏழை எளிய மக்கள் மற்றும் நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் முற்றிலும் இலவசமாக தவெக மருத்துவர் அணி சார்பில் வழங்கிய இந்த இலவச மருத்துவ முகாமிற்கு காவேரிப்பட்டினம் மட்டுமின்றி அருகிலுள்ள கிராமத்தில் இருந்து ஏராளமான பொதுமக்கள் முகாமில் கலந்து கொண்டு பயனடைந்தனர். மேலும் தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகள், மற்றும் மருத்துவக் குழுவினர் இந்த இலவச இருதய மற்றும் பொது மருத்துவ முகாமை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## தமிழக முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு

# முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு தென்காசி மத்திய மாவட்ட தவெக செயலாளர் மாலை அணிவித்து மரியாதை



தென்காசி, ஜூன்.23

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு தென்காசி மத்திய மாவட்ட தவெக செயலாளர் ராஜபிரகாஷ் தென்காசி மலையான் தெருவில் அமைந்துள்ள தெய்வத் திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் பின்னர் தவெக நிர்வாகிகள் முதலமைச்சர் விஜய் முகம் பதித்த கேக்கை வெட்டி கொண்டாடினர் அங்கு கூடியிருந்த பொது மக்களுக்கு இனிப்புகள் கொடுக்கப்பட்டன அதனைத் தொடர்ந்து இலஞ்சி ஆரம்ப ஜோதி ஆசிரமத்தில் உள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டன அதனைத் தொடர்ந்து மேலகரத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது நிகழ்ச்சியில் மலையான் தெரு கோபால் ராம், மேலகரம் பேரூர் கழக செயற்குழு உறுப்பினர்கள் ஹரிஹரசுதன், தேவராஜன் ,தென்காசி ஒன்றிய பொருளாளர் குட்டி சிவா ,தென்காசி ஒன்றிய செயற்குழு உறுப்பினர் அரிகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெரி, மாவட்ட இளைஞர் அணி இணை அமைப்பாளர் பிரகாஷ் ,மற்றும் தவெக கட்சியை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்



# தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

கோவை ஜூன்:23

கோவை சாய்பாபா காலனி பகுதியில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு 500 நபர்களுக்கு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.இதில் தையல் இயந்திரம் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் வழங்கப்பட்டது.

இதில் பிற்படுத்த பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியிள் சாய்பாபா காலனி பகுதி கழக செயலாளர்காலனி முஸ்தபா விழாவை ஏற்பாடு செய்து இருந்தார்.இந்நிகழ்ச்சியில் பாலாஜி,ஷேக் அப்துல்லா,தமிழரசி டேனியல்,பாபு,தருண்,அலெக்ஸ்,ஹேமந்த்,மயில் வாகனம்,அபுதாகிர்,தமிழ் இலக்கிய பானு,ஜீவானந்த, ஸ்ரீசத்யா,பட்டுராஜா விஜய்,குமார், சுதா,சந்தியா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# போட்டித்தேர்வுகளுக்கான கட்டணமில்லா போட்டித்தேர்வு பயிற்சி வகுப்பு

## அமைச்சர் விஜய் பாலாஜி துவக்கி வைத்தார்.



ஈரோடு ஜூன் 22

கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் விஜய்பாலாஜி அவர்கள் ஈரோடு இடையன்காட்டுவலசு, மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் டீம் அகாடமி சார்பில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு வாரியம் நடத்தும் குரூப் I,II,IIA,IV ஆகிய போட்டித்தேர்வுகளுக்கான கட்டணமில்லா போட்டித்தேர்வு பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்தார்.

அப்போது அவர் பேசும் போது தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அனைத்து தரப்பு மக்களுக்கும் அரசின் திட்டங்கள் சென்று சேர வேண்டும் என்ற நோக்கில் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் இன்றையதினம் போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்பு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி வகுப்பானது கடந்த 7 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்த பயிற்சி வகுப்பில் பயின்ற 10 மாணவ, மாணவியர்கள் போட்டித் தேர்வில் வெற்றி பெற்று பல்வேறு அரசு துறைகளில் பணியாற்றி வருகின்றார்கள். இந்த பயிற்சி வகுப்பினை அனைத்து தரப்பினர்களும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், மேலும் மாணவர்கள் முயற்சி எடுத்து திட்டமிட்டு படித்தால் எளிதில் வெற்றி பெறலாம். இந்த மையத்திலிருந்து ஏராளமானவர்கள் வெற்றி பெற்று பணியில் சேர்கிறார்கள் என்ற செய்தி என் காதுகளுக்கு விரைவில் எட்ட வேண்டும் என்பது எனது கனவாகும் என்று கூறினார்.

மேலும் இப்பயிற்சியில் இந்த பயிற்சி மையத்தில் சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு விடுமுறை நாட்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு ஆணையாளர் அர்பித்ஜெயின் பள்ளித்தலைமையாசிரியர் அமுதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# பா.ஜ.க சார்பில் தெருமுனை கூட்டம் மேல்புறம் சந்திப்பில் நடந்தது

மார்த்தாண்டம், ஜூன்.23

மேல்புறம் ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி சார்பில் தெருமுனைகூட்டம்மேல்புறம்சந்திப்பில்நடைபெற்றது. கூட்டத்தில் பா.ஜ.க மேல்புறம் தெற்கு ஒன்றிய தலைவர் சரவணவாஸ் நாராயணன் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர்சுரேஷ்குமார்,ஒன்றியபொருளாளர்கங்காதரன் முன்னிலை வகித்தனர்.. ஒன்றிய துணைத் தலைவர் ராஜேஷ் வரவேற்றார். மாநில சமூக ஊடகப் பிரிவு செயலாளர் அருண்குமார், முன்னாள் ராணுவ பிரிவு மாவட்ட அமைப்பாளர் ராஜேஷ், கலை மற்றும் கலரச்சார பிரிவு மாவட்ட அமைப்பாளர் சுகுமாரன், ஊடக பிரிவு மாவட்ட அமைப்பாளர் அருள் குமார், உள்ளாட்சி மேம்பாட்டு பிரிவு மாவட்ட அமைப்பாளர் சேகர், மாவட்ட செயலாளர் விஜு ,மாலட்ட பிரிச்சார பிரிவு இணைஅமைப்பாளர்சுஜித்பாபு, உள்ளிட்டோர்பேசினர். இந்த தெரு முனை கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் ஐயப்பன், லதா, ஒன்றிய துணைத்தலைவர் மோகன்தேவ், முன்னாள் ஒன்றிய துணைத் தலைவர் வடிவேல்ராஜ் கட்சி நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். ஒன்றிய பொதுச்செயலாளர் சுரேஷ் குமார் நன்றி கூறினார்.



# குமரி கடலோர பகுதிகளில் கடல்நீர் உட்புகுவதை தடுக்கும்பணி கலெக்டர் ஆய்வு

நாகர்கோவில், ஜூன்.23

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பாக பெய்த மழை மற்றும் கடல்சீற்றம் காரணமாக கணபதிபுரம் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட அழிக்கால், பிள்ளைத்தோப்பு கடலோர கிராமத்தில் தெருக்கள் மற்றும் வீடுகளுக்குள் கடல் நீர் புகுந்தது. கடல் நீர் உட்புகுந்ததால் கடலோர மீனவ மக்கள் பாதிப்புக்கு உள்ளனார்கள்.

இதையடுத்து தற்போது துவரங்குளம், வட்டகிளை பத்து மறுகால்ஓடை மற்றும் ஆலங்கால் ஓடைகள் உள்ளிட்டவைகள் தூர்வாரப்பட்டு, ஓடைகள் வழியாக மழைநீர் கடற்கரை பகுதிக்கு செல்லும் வகையில் பொழிமுகம் பகுதியில் உள்ள மணல் திட்டைகளை ஜே.சி.பி வாயிலாக அகற்றப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று இன்று அந்த பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து அவர் கூறியதாவது:

கடல் நீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுகால் ஓடை மற்றும் குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, நீரோட்டம் தடையின்றி செல்ல நீர்வளத்துறை செயற்பொறியாளர் உள்ளிட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதோடு, பலவீனமாக உள்ள தடுப்புசுவர்களை பலப்படுத்தவும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அழிக்கால் மற்றும் பிள்ளைத்தோப்பு மீனவ கிராமத்தில் கடல் நீர் உட்புகுதல் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, நீர்வளத்துறை, வருவாய்துறை, ஐ ஐ டி மெட்ராஸ் மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகியவை ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என கூறினார்.



சென்னை, பூந்தமல்லி குமணன்சாவடி கன்னம்புள்ளி செட்டி தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ தான்தோன்றிய சமயபுரம் முத்துமாரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக பூவை மு. வெங்கடேசன்,பானுவெங்கடேசன்இவர்களதுஏற்பாட்டில் நடைபெற்றது. மேலும் சாமி அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது. வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் தீர்த்த பிரசாதம், அன்னதானம் வழங்கப்பட்டது.



சென்னை, போரூர் தொழில்துறை எஸ்டேட், ஏகாம்பரம் நாயக்கர் முதல் மெயின் ரோட்டில் எஸ் எஸ் ஹைதராபாத் பிரியாணி 29 வது புதிய கிளை மிக பிரம்மாண்ட திறக்கப்பட்டது. ஒரு நாள் சிறப்பு சலுகையாக இரண்டு சிக்கன் பிரியாணி வாங்கினால் ஒரு சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது. வருகை தந்த வாடிக்கையாளர்களை உரிமையாளர் அப்துல் சம்மந் மற்றும் மேலாளர் மோகன், சேகர், அக்கில் அனைவரையும் அன்புடன் வரவேற்றனர்.



சென்னை கொளத்தூர், பொன்னி அம்மன் மேடு சாஸ்திரி நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வினைத்தீர்த்த விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. எல்லா உயிர்களுக்கும் தாயும் தந்தையுமாய் விளங்கும் பரம்பொருளின் மூத்த முதல்வனாய் விளங்கும் ஆனைமுகத்தான் திருவருள் துணை கொண்டு சாஸ்திரி நகர் பகுதியில் அமைந்துள்ள அருள்பாலித்து கொண்டிருக்கும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனாகிய ஸ்ரீ வினைத்தீர்த்த விநாயகர் பெருமானுக்கு மங்களகரமான ஸ்ரீ பராபக வருடம் உத்திராயணம் க்ரீஷ்ம ருது, ஆனி மாதம் ஏழாம் நாள் ஞாயிற்றுக்கிழமை சுக்லபக்ஷ சப்தமி திதி, பூர நட்சத்திர, சிம்ம லக்னம், அமிர்த யோகமும் கூடிய நன்னாளில் குரு ஹோரையில் அருள்மிகு ஸ்ரீ வினைத்தீர்த்த விநாயகர் பெருமானுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆலய தலைவர் அசோக் குமார், செயலாளர் ஆனந்தன், பொருளாளர் டெல்லிபாய், துணை செயலாளர் மணி, இணைசெயலாளர் சுப்பையா, மற்றும் ஆலய விழா குழுவினர், ஊர் பொதுமக்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. உடன் அறந்தாங்கி சபதி ராஜ்குமார் ஆலய கட்டுமான பணிகளை சிறப்பாக செய்திருந்தார். வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் தீர்த்த பிரசாதம்,அன்னதானம் வழங்கப்பட்டது.



கோவை காந்தி பார்க் பகுதியில் உள்ள அருள்மிகு பால தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வி சம்பத்குமார் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு தங்கத்தேர் இழுத்து சிறப்பு பூஜையில் கலந்து கொண்டார்.உடன்செயல் அலுவலர் தேவி பிரியா,கணக்காளர் முத்துக்குமார்,அர்ச்சகர் விஜயகுமார் கண்ணன் மாணிக்கம் மற்றும் திருக்கோவில் பணியாளர்கள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.


## தொலைந்து விட்டது

எனது கட்சிக்காரர் FED BANK FINANCIAL SERVICES LIMITED அலுவலகம் . எண் 311 முதல் மாடி சேர்மன் PKSA ஆறுமுகம் ரோடு சிவகாசி 626123 தமிழ்நாடு என்ற முகவரியில் உள்ளது. திரு. வசந்தகுமார் த/பெ. பரமசிவம் எண்108 அ .பாறைபட்டி ஜாரி உசிலம் பட்டி மதுரைப625702, பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம் மேற்படி நிறுவனத்திடம் வீட்டுக்கடன் விண்ணப்பித்துள்ளார். இந்நிலையில் திரு. வசந்தகுமார் த/பெ. பரமசிவம் அவருடைய அசல் தாய் பத்திரமான கிரைய பத்திரம் பேரையூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண் 906/2000ஆவண பதிவு செய்த நாள் 06/04/2000 கடந்த 14/05/2015 தேதியில் மாலை சுமார் 5.00 மணியளவில் பாறைப் பட்டி இருந்து பேருந்து பேரையூர் நிலையத்திலிருந்து எடுத்து செல்லும் போது தொலைந்து விட்டது. பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை.

எனவே பொதுமக்கள் மேற்படி ஆவணத்தை யாரிடமோ கிடைக்க பெற்றாலோ மற்றும் மறுப்பு தெரிவிக்க வேண்டும் என்றாலே 7 நாட்களுக்குள் எமது கீழ் கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்

CONTACT:
S.SOUNDAPPAN B.A,B.L,C.D.T
D.NO.9A 1ST FLOOR NALLATHAMBI STREET PALAYAMKOTTAI
THIRUNELVELI 627002, CRN: CRR24035291


DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C,246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.